5

# Occupational Movement of Parents and its Influence on Children's Education.

## பெற்றோர்களின் தொழில் ரீதியான நகர்வும் பிள்ளைகளின் கற்றலில் ஏற்படுத்தும் செல்வாக்கும

**M.U. Nouferkhanth**

*Department of Education and Childcare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka, Sri Lanka*

**Abstract:** In the contemporary world, "Education" is the essential aspect. It is also the basement for the improvements of society in various manners. The educational activities of students should be to reveal best outcomes and results. But the lack of interrelation between the parents and children causes to the non-improvement on children's education. The occupational movement of parents is the main course for the lack of interrelation of parents with children, lack of continuous attendance to school, having fights with classmates in classrooms, disobeying the teachers, use of alcohol and school dropouts. Regardingly, five schools in the Eravur Education Zone where senior intermediate students are learning have been selected on the basis of objective sample for the study. five principals, 50 teachers,105 students, 25 parents on the rate of 1:5 per 05 parents for school have been selected as the research sample. As per the research findings, due to the occupation of parents and the lack of interrelation between parents and children. Children are subjected to the problems of psychology, health, social, discipline and difficultly in learning and these aspects are heavily affected the education of children. Recommendation are presented as increasing the contribution of parents in children's education to make it effectively, making awareness to clarify the worth of time to the parents which the parents are giving for their children and educating the parents that their engagement must motivate their children's education.

**Key words**: **Occupation, Movement, Learning, Influence**

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றைய உலகில் "கல்வி" என்பது இன்றியமையாத ஓர் விடயமாக உயர்ந்து காணப்படுகின்றது. சமூகமானது பல்வேறு வகையிலும் முன்னேறியுள்ளதுக்கும் அடிப்படையாகவும் கல்வியே அமைந்துள்ளது. மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சிறந்த விளைவுகளையும், சிறந்த அடைவு மட்டத்தையும் கொடுப்பதாக அமைய வேண்டும். ஆனால் இன்று கற்றலில் முன்னேற்றம் காணப்படாமை, அடைவுமட்டம் குறைவடைந்து செல்லல், பாடசாலை நிகழ்வுகளில் பங்குபற்ற ஆர்வமின்மை, பாடசாலைக்கான தொடரான வரவு ஒழுங்கின்மை, ஒழுக்க சீர்கேடுகள், இளவயதுத் திருமணம், போதைப் பாவனை மற்றும் பாடசாலை இடைவிலகல் போன்றவற்றிற்கு முக்கிய காரணியாக பெற்றோரின் தொழில் காணப்படுகிறது.

இதன்படி ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் உள்ள 05 பாடசாலைகளும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு மாதிரிகளாக 5 அதிபர்கள், 50 ஆசிரியர்களும், 105 மாணவர்களும், ஒரு பாடசாலைக்கு 5 பெற்றோர்கள் வீதம் 1:5 என்ற விகிதத்தில் 25 பெற்றோர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்வு முடிவுகளிலிருந்து, அதிகமான மாணவர்கள் தங்கள் பெற்றோர்களின் தொழில் காரணமாக பாதுகாவலர்களின் பராமரிப்பிலே வளர்கின்றனர். பெற்றோரின் கண்காணிப்பு குறையும் போது உளவியல், சுகாதார, சமூக, ஒழுக்க ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்கு பிள்ளைகள் ஆளாகியுள்ளமையும் இவை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளைப் பெருமளவில் பாதித்துள்ளமையும் கண்டறியப்பட்டன. இதனால் பாதிப்படையும் கற்றலையும் எதிர்காலத்தையும் வளம்படுத்த கற்றல் செயற்பாடுகளில் பெற்றாரின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தல், பெற்றோரின் தொழிலைப் போன்றே பிள்ளைகளின் கற்றல் செயற்பாடும்

முக்கியம் என்பதை பெற்றோர்களுக்கு புரிய வைத்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல், வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை நடைமுறைப்படுத்தல் போன்ற விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள் தொழில்நகர்வு, கற்றல், செல்வாக்கு

## அறிமுகம்

### ஆய்வு அறிமுகம்

பிள்ளைகளின் கற்றலில் பெற்றோர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு குழந்தைகளுக்கும் சிறந்த பயிற்சியாளர் பெற்றோர்கள்தான். இன்றைய நவீன உலகில் தாய், தந்தை இருவரும் வேலைக்குச் செல்வதென்பது காலத்தின் தேவையாக மாறிவிட்டது என்று கூறுவது சாலச்சிறந்ததாகும். காரணம் நவீன உலகின் தேவைகள் அதிகரித்த போதும் அதற்கேற்ற வகையில் இருவரும் வேலைக்குச் சென்றால் தான் குடும்ப பொருளாதாரத்தை ஓரளவேனும் முகாமைத்துவம் செய்ய முடியும் என்ற நிலை உருவாகியுள்ளமையாகும். இதனால் பெற்றோர் பிள்ளைகளிடம் குறைவான இடைத் தொடர்பு ஏற்பட நேரிடுவதுடன் கற்றல் செயற்பாடுகளில் பங்கேற்கும் விகிதத்தையும் வெகுவாகக் குறைக்கின்றது.

கல்விச் சமூகமயமாக்கலை ஏற்படுத்தும் முகவர்களில் பாடசாலை, தொழில் நிறுவனம், சமய நிறுவனம், சமவயதுக் குழுக்கள போன்றவற்றில் ஒன்றாக விளங்கும் குடும்பம் மிகவும் முக்கிய வகுப்பாகக் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக பெற்றோர்களே முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர். ஏனெனில் பிள்ளையானது குடும்பத்திலிருந்தே கற்றுக்கொள்வதுடன் தன்னுடைய முதல் ஆசானாகவும் பெற்றோர்களையே கருதுகிறது. பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்லும் முன்பே கற்றுக் கொள்ளாத பல்வேறுபட்ட விடயங்களை தமது பெற்றோரிடம் கற்றுக் கொள்ள ஆரம்பிப்பதுடன் தனது கற்றல் அனுபவங்களையும் பெற்றோருடன் பகிர்ந்து கொள்ளவும் செய்கின்றனர். பிள்ளையின் கற்றல் அனுபவங்களை சரியான முறையில் வழி நடாத்த வேண்டிய பாரிய பொறுப்பு மற்றவர்களைக் காட்டிலும் பெற்றோருக்கு உண்டு. சரியான முறையில் பிள்ளைகளை வழிநடாத்தி அறிவு, திறன், மனப்பாங்குடன் கூடிய பிள்ளைகளை உருவாக்குவதிலும் பாரிய கடப்பாடுடையவர்களாகவும் பெற்றோர்கள் காணப்படுகின்றனர்.

இன்றைய நவீன விஞ்ஞானத் தொழிநுட்ப விருத்தியினால் கட்டிளமைப் பருவ மாணவர்கள் தொலைத் தொடர்பு சாதனங்களிலேயே தமது அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். அந்த வகையில் மாணவர்கள் தமது நண்பர்களுடன் இணைந்தும், தனித்தும் சினிமாப் படங்கள், ஆபாச வீடியோக்கள், பாடல்கள், சமூக வலைத்தளங்கள், விளையாட்டுக்கள் போன்றவற்றிலேயே தமது அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் பல்வேறுபட்ட தவறான விடயங்களைக் கற்றுக் கொள்கின்றனர். மேலும் இன்று பெற்றோர் வெளிநாடுகளுக்குச் செல்வதாலும், பெண் பிள்ளைகளை பெற்றோர் உறவினர் வீடுகளில் விட்டுச் செல்வதால் மாமா, சித்தப்பா, பெரியப்பா, அண்ணா போன்ற உறவுகள் மூலமே இன்று அதிக துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனால் கட்டாயக் கல்வியைத் தொடர முடியாமை, பரீட்சையில் பின்னடைவுகள், நெறி பிறழ்வான நடத்தைகள், கற்றலில் ஆர்வமின்மை, உளவியல் ரீதியான தாக்கங்கள் போன்றவற்றால் பிள்ளைகள் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றார்கள். எனவே, பெற்றோர்களின் தொழில் ரீதியான இடப் பெயர்வினால் சிரேஷ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள் எதிர் நோக்கும் கல்விசார் பிரச்சினைகளை இனங்கண்டு ஆராய்வதன் மூலம் பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்துவதற்கான தீர்வுகளை முன்வைப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

### 1.2 ஆய்வுப் பிரச்சினை

பெற்றோர்களின் தொழில் ரீதியான நகர்வானது, பெற்றோர்கள் - பிள்ளைகளுக்கிடையிலான இடைத்தொடர்பினைப் வெகுவாகக் குறைக்கின்றமையால் பிள்ளைகள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுவதோடு பிள்ளைகளின் கற்றலையும் பாதிப்பதாகவும் அமைகின்றது. பெற்றோர்கள் பாடசாலை,அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களைக் குறை கூறுகின்றமை, பிள்ளைகளின் தேவைகள் நிறைவேற்றப்படாமை, பாதுகாவலர்கள் சிக்கல்களை எதிர்நோக்குகின்றமை, சிறுவரகள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளமை, அதிகமான பிள்ளைகள் பாடசாலையில் துரித உணவுகளையே காலை உணவாக உட்கொளகின்றமை, மாணவர்களிடத்திலே ஊடகப் பாவனை அதிகரித்துள்ளமை, ஆசிரியர்களுக்குப் கீழ்ப்படிந்து நடக்காமை, பாடசாலை வரவில் ஒழுங்கீனம் இவ்வாறான பல பிரச்சினைகளுக்குக் காரணம் பெற்றோர்களின் தொழில் ரீதியான நகர்வு என்பதுடன் அது அவர்களது பிள்ளைகளின் கற்றலில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதனையும் அறிய வேண்டி உள்ளது.

### 1.3 ஆய்வின் பொது நோக்கம்

பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற பிள்ளைகளின் பெற்றோர்களின் தொழில் ரீதியான நகர்வினால் பிள்ளைகளின் கற்றலில் ஏற்படுத்தும் ஏற்படும் பாதிப்புகளினைக் கண்டறிந்து சீர் செய்வதற்கான சிபாரிசுகளை முன்வைத்தல் ஆகும்.

### 1.4 சிறப்பு நோக்கங்கள்

1. பெற்றோர்களின் தொழில் ரீதியான நகர்வு தொடர்பில் பிள்ளைகளின் உடன்பாட்டினைக் கண்டறிதல்.
2. பெற்றோர்களின் தொழில் ரீதியான நகர்வினாலும் பிள்ளைகளைப் பிரிந்திருக்கும் போதும் இடைத்தொடர்பு குறைவதால் பிள்ளைகள் எதிர் நோக்கக் கூடிய பிரச்சினைகளைக் கண்டறிதல்.
3. பிள்ளைகள் எதிர் நோக்கும் இப்பிரச்சினைகள், கற்றல்-கற்பித்தல செயற்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கண்டறிதல்.
4. பிள்ளைகளுக்கு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆர்வத்தை ஏற்படுத்தும் மனநிலை உருவாவதற்கான வழிமுறைகளைச் சிபாரிசு செய்தல்.

## 2.0 இலக்கிய மீளாய்வு

ஷாஜஹான் என்பவர் ''சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்'' என்னும் ஆய்வுக் கட்டுரையில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எளிதில் ஆளாவதற்கு பல காரணங்கள் உள்ளன. கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் உடல், மனவெழுச்சி மாற்றங்கள், அறியாமை, படிப்பறிவின்மை, பாலியல் தூண்டலை ஏற்படுத்தும் திரைப்படங்கள், நாடகங்கள், சஞ்சிகைகள், ஆபாச நிழற்படங்கள், பாடல்கள், வீடியோ காட்சிகள் போன்றன சிறுவர்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருத்தல், தீய நண்பர்களின் சகவாசம், பெற்றோரின் கவனயீனம், பெற்றோர் வெளிநாடு சென்றிருத்தல், குடும்ப கட்டமைப்பு சீர்குலைந்திருத்தல், சிறுவர் வேலைக்குச் செல்லல், செல்லிடப்பேசி இணையத் தளத்தினூடாக தவறான நண்பர்களின் சகவாசம், இணையத் தளத்தை தவறாகப் பயன்படுத்தல், பாட விதானத்தில் பாலியல் கல்விக்கு உரிய இடம் அளிக்காமை போனறன சிறுவர்கள பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எளிதில் ஆளாவதற்கு பிரதான காரணங்களாக உள்ளன. சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதன் காரணமாக அவர்களில் பல தீய விளைவுகள் ஏற்படுகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

Kath Dr.Abdhul Saththar, Allahdino Abro.Ph.D and Roshan Ali Mugheri (2012) என்பவர்களால் பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி, பிள்ளைகள் தங்களுடைய பெற்றோரின் இடைவினை குறையும் போது வெளி இடங்களில் அன்பைத் தேட முயற்சிக்கின்றனர். இதனால் உடன்பாடற்ற நட்பு வட்டாரங்கள் உருவெடுக்க ஆரம்பிக்கின்றன. இவ்வாறான பிள்ளைகள் வெளிப்படையாக பலமானவர்களாகவும், உள ரீதியாக பலவீனமானவர்களாகவும் காணப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

John, Ermish மற்றும் Marco (1970) என்பவர்களின் ஆய்வில் பெற்றோர் இருவரும வேலைசெய்யும் பிள்ளைகளின் சகோதரர்கள் 516 பேரை வைத்து மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி பெற்றோர் இருவரும் முழு நேரத் தொழில் செய்வதனூடாக அவர்களது பிள்ளைகள் பின்வரும் நிலைமைகளுக்கு ஆளாகியுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பரீட்சை அடைவுகளில் பின்னேற்றம்.

பிள்ளைகளின் சமூகமயமாக்கம் பாதிக்கப்படல்.

பிள்ளைகளின் எதிர்காலம் மற்றும் அவர்களின் வேலைவாய்ப்பு பாதிக்கப்படல்.

பிரவுன் (2004), ஹாரிஸ் (1995) ஆகியோர் இளம் பருவத்தினர் மற்றும் அவர்களது சமவயது குழுக்கள் குழந்தைப் பருவத்திலிருந்தும் பெற்றோரிடமிருந்தும் சுயாதீனமானவர்களாகத் தொடங்கும் போது உறவினர்களுடைய உறவுகளில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த பங்கு வகிக்க ஆரம்பிக்கின்றன எனக் குறிப்பிடுகின்றார்.

## ஆய்வு முறையியலும் வடிவமைப்பும்

விபரண ஆய்வு முறைகளில் ஒன்றான அளவை நிலை ஆய்வுமுறை இவ்வாய்விற்குப் பயன் படுத்தப்பட்டுள்ளது. அத்தியாயம் ஒன்றிற்கான ஆய்வு அறிமுகத்தில் அறிமுகம், ஆய்வின் பின்னணி, ஆய்விற்கான நியாயம், ஆய்வுப் பிரச்சினைகள் ஆய்வின் நோக்கங்கள் ஆய்வுப் பிரதேசம் என்பன தொடர்பான செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஆய்வுப் பிரச்சினைக்குரிய தீர்வைக் காண, ஆய்வுநோக்கங்களை உருவாக்க, ஆய்வு தொடர்பான முன்னைய அறிவு அவசியமாகும்.

இவ்வாய்வினை மேற்கொள்வதற்குத் தயாரிக்கப்பட்ட ஆய்வுக் கருவிகளாக வினாக்கொத்து, நேர்முகங்காணல், அவதானம் என்பன அமைந்தன. இவ்வாய்வை மேற்கொள்வதற்கு ஆய்வு முன்னோடியாக ஆய்வுப் பாடசாலைகளாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அல்லாத வுலிந ஐஐ பாடசாலைக்கு ஆய்வாளனால் தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் பரீசீலித்துப் பார்ப்பதற்காக வழங்கப்பட்டன. இவ் வினாக்கொத்துக்கள் முறையே பாடசாலை அதிபர், ஆசிரியர்,பெற்றோர், தரம் 10,11 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் மாணவர்கள் இடர்படும் வினாக்கள் கண்டறியப்பட்டு அவை தொடர்பான மயக்கநிலை தெளிவுபடுத்தப்பட்டு மீண்டும் வினாக்கொத்துக்கள் திருத்தியமைக்கப்பட்டு சீர்செய்யப்பட்டன.

இவ்வாய்வில் அளவு மற்றும் பண்பு ரீதீயில் அமைந்த கலப்பு முறையியல் (ஆைைநன ஆநவாழன) பயன்படுத்தப்பட்டுள்ளது. அளவு, எண் ரீதியிலான முறையியலாக எண்கள், புள்ளிவிபரங்கள், அட்டவணைகள், வரைபுகள் மாணவர்தொகை, வரைபடங்கள், விகிதாசாரங்கள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக புறவயத்தன்மை கொண்டதாக ஆய்வு முன்னெடுத்துச் செல்லப்படுவதுடன் தரவுகளினதும் தகவல்களினதும் நம்பகத்தையும், தகுதியையும் உறுதிப்படுத்தும் வகையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

### மாதிரித் தெரிவு

இவ்வாய்விற்காக ஆய்வாளனினால் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் ஏறாவூர் கல்விக் கோட்டத்தில் அமைந்த 18 பாடசாலைகளில் இலகு எழுமாற்று மாதிரியெடுப்பின் மூலம் 1AB, 1C மற்றும் Type II வகைகள் உள்ளடங்கலாக 5 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. அங்கு தரம் 10 தொடக்கம் தரம் 13 சிரேஷ்ட இடைநிலைப் பிரிவில் கல்வி பயிலும் 1575 மாணவர்களில் 525 மாணவர்கள் ஆய்வுப் பிரச்சினைக்குட்பட்டவர்களாவர். அதாவது பெற்றோர்களின் தொழில் நிமித்தம் பாதுகாவலர்களுடன் இருக்கும் பிள்ளைகளாவர். எளிய மாதிரியெடுப்பு முறை மூலம் 5:1 விகிதத்தில் 105 மாணவர்களும், 145 ஆசிரியர்களில் 3:1 விகிதத்தில் 50 ஆசிரியர்களும், 5 அதிபர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் ஒரு பாடசாலைக்கு 5 பெற்றோர் என்ற ரீதியில் அதாவது 1:5 என்ற விகிதத்தில் 25 பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## தரவுப் பகுப்பாய்வும் வியாக்கியானமும்


பிள்ளைகளின் பெற்றோர்களின் தொழில் ரீதியான நகர்வாவினால் பிள்ளைகளின் கற்றலில் ஏற்படுத்தும் செல்வாக்கு என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வை முன்னெடுப்பதற்காக ஆய்வு நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சிறப்பு நோக்கங்களுக்கமைவாக ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டன. மேலும் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டதோடு அதிபரிடம் நேர்முகம் காணலின் மூலம் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டன. புள்ளிவிபர ரீதியாக பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு துல்லியமாக சதவீதத்தில் காட்டப்பட்டு Microsoft Office Excel உதவியுடன் சலாகை வரைபுகள் மூலம் காட்டப்படுகின்றன.

மேலும் பண்பு ரீதியாகப் பெறப்பட்ட தகவல்களும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு, வியாக்கியானம் செய்யப்பட்டு விடயப்பரப்புடன் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு ஒத்துப் போகின்ற விடயங்களை அவை தொடர்பாக ஏற்கனவே இரண்டாம் அத்தியாயமான இலக்கிய மீளாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் ஒப்பிட்டு கலந்துரையாடலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நேர்காணல், அவதானம் போன்ற ஆய்வுக் கருவிகளின் மூலம் பெறப்பட்ட தகவல்களும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு அவை வியாக்கியானம் செய்யப்பட்டு அவை தொடர்பாக ஏற்கனவே மும்மொழியப்பட்டுள்ள விடயங்களுடன் கலந்துரையாடலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளன.

## முடிவுகள்

**பிள்ளைகளுடன் பெற்றோர்கள் போதியளவு நேரத்தை செலவளிப்பதில்லை.**

உங்களுடைய பெற்றோர்கள் உங்களுடன் போதியளவு நேரத்தைச் செலவளிக்கின்றார்களா? எனக் கேட்கப்பட்ட போது அது பற்றி ஆம் என்று 17.14 சதவீதமான மாணவர்களும், ஓரளவு என்று 71.42 சதவீதமான மாணவர்களும், இல்லை என்று 11.42 சதவீதமான மாணவர்களும் விடையளித்துள்ளனர்.




**உரு 4.1 : போதியளவு நேரத்தைச் செலவளிக்காமைக்கான காரணங்கள்**

அதற்கான காரணத்தை வினவிய போது, பெற்றோர்கள் தொழிலுக்குச் செல்லல் என 33.33 சதவீதமான மாணவர்களும், நேரமின்மை பயன்படுத்துதல் என 05.74 சதவீதமான மாணவர்களும், அக்கறையின்மை என 31.03 சதவீதமான மாணவர்களும், பெற்றோர்களுக்கிடையிலான முரண்பாடு என 21.83 சதவீதமான மாணவர்களும், வேறு காரணங்கள் என 08.04 சதவீதமான மாணவர்களும் விடையளித்துள்ளனர். அதிகமானவர்கள் பெற்றோரின் தொழிலையே காரணம் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

## 4.2 மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்குச் செல்வதற்கான விருப்பம்

ஆர்வத்துடன் பாடசாலைக்குச் செல்வதற்கான விருப்பம் பற்றி பெற்றோர்களிடம் வினவப்பட்ட போது அவர்கள் அளித்த பதில்களை பின்வரும் உரு காட்டுகின்றது.

மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்குச் செல்வதற்கான விருப்பம் பற்றி பெற்றோர்களிடம்




வினவப்பட்ட போது அவர்கள் அளித்த பதில்களை பின்வரும் உரு காட்டுகின்றது.

**உரு 4.2 : மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்குச் செல்வதற்கான விருப்பம்**

மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்குச் செல்வதற்கான விருப்பம் பற்றி பெற்றோர்களிடம் வினவப்பட்ட போது, ஆம் என்று 27.14 சதவீதமான பெற்றோர்களும், ஓரளவு என்று 66.66 சதவீதமான பெற்றோர்களும், இல்லை என்று 6.02 சதவீதமானவர்களும் விடையளித்துள்ளனர்.

### மாணவர்கள் போட்டி நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றுகின்றமை தொடர்பானது


ஆசிரியர்களிடம் மாணவர்கள் போட்டி நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றுகிறார்களா என்பது தொடர்பாக வினவப்பட்டபோது அவர்கள் அளித்த பதில்கள் பின்வரும் அட்டவணையில் காட்டபப் ட்டுள்ளன.

| விடையளித்த விதம் | விடையளித்தோர் தொகை | விடையளித்தோர் சதவீதம் |
|---|---|---|
| குறைவு | 31 | 62 |
| மிகக்குறைவு | 12 | 24 |
| சாதாரணம் | 07 | 14 |
| **மொத்தம்** | **50** | **100.00** |

**அட்டவணை 1 : மாணவர்கள் போட்டி நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றுதல்**

**பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வராமல் தண்டனைக்கு உள்ளாகுதல்.**

இது தொடர்பாக மாணவர்களிடம் வினவப்பட்ட போது 80 சதவீதமான மாணவர்கள் தண்டனைக்கு உள்ளாகுவதாகவும் 20 சதவீதமான மாணவர்கள் தண்டனைக்கு உள்ளாகுவதில்லை என்றும் பதிலளித்துள்ளனர். மேற்படி தரவுகளின்படி பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வராமல் தண்டனைக்கு உள்ளாகும் தன்மை அதிகம் எனத் தெளிவாகின்றது. மாணவர்களிடம் தாங்கள் பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வராமல் தண்டனைக்கு உள்ளாகுவதற்கான காரணம் யாது? என வினவப்பட்ட போது அவர்கள் அளித்த பதில்கள் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளன.





**பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வராமல் தண்டனைக்கு உள்ளாகுதற்கான காரணங்கள்**

அதிகமானவர்கள் வீட்டில் வேலைகள் மற்றும் பொறுப்புக்கள் அதிகம் என்ற காரணத்தையே தெரிவு செய்துள்ளனர். அதாவது தாய் தந்தையைப் பிரிந்திருக்கும் போது இளம் சகோதரர்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டி உள்ளதால் பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வராமல் தண்டனைக்குள்ளாகுகின்றனர் என்பதும் மாணவர்களின் தரவுகளிலிருந்து பெற முடிந்தது.

**மாணவர்கள் வகுப்பில் ஏனைய மாணவர்களுடன் முரண்பட்டுக் கொள்கின்றமை.**

முரண்பாடுகள் என்பது பல்வேறுபட்ட காரணங்களுக்காக பல்வேறுபட்டோர் மத்தியில் இடம்பெறுவதாகும். அந்த வகையில் இம் மாணவர்களின் முரண்பாடுகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக ஆசிரியர்களிடம் பாடசாலையில் அல்லது நீர் வகுப்பறையில் இம் மாணவர்கள் ஏனைய மாணர்களுடன் முரண்பட்டுக் கொள்ளும் சந்தர்ப்பங்களை அவதானிக்கின்றீரா? என்று வினவப்பட்ட போது 47 ஆசிரியர்கள் ஆம் என்ற பதிலை வழங்கினர். இது மாதிரியெடுப்பில் 90 சதவீதம் ஆகும். அதே வேளை 3 ஆசிரியர்கள் இல்லை என்ற பதிலை அளித்தனர். இது 10 சதவீதமாக அமைகிறது. ஆகவே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் கட்டிளமைப் பருவ மாணவர்கள் மத்தியில் முரண்பாடுகள் ஏற்படுவதை அறிய முடிகிறது. அதைத் தொடர்ந்து ஆசிரியர்களிடம் மாணவர்களிடம் நீர் அவதானிக்கக் கூடிய முரண்பாடுகள் பற்றி வினவிய போது



அவர்கள் அளித்த துலங்கல்களை உரு 4.4 எடுத்துக்காட்டுவதாய் உள்ளது.

**மாணவர்கள் வகுப்பில் ஏனைய மாணவர்களுடன் முரண்பட்டுக் கொள்வதற்கான காரணங்கள்**

மேல் காட்டப்பட்டுள்ள தரவுகளுக்கமைய இம் மாணவர்களிடையே முரண்பாடுகளை அவதானிப்பதாக பதிலளித்த 47 ஆசிரியர்களிடமும் எவ்வாறான முரண்பாடுகளை நீர் அவதானிக்கின்றீர்? என வினவிய போது அதற்கு ஆசிரியர்களால் வழங்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் 30 ஆசிரியர்கள் மாணவர்கள் அதிகம் கோபம் கொள்வதாக பதிலளித்தனர். இது 63.82 சதவீதமாக அமைகிறது. 9 ஆசிரியர்கள் மாணவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதாக பதிலளித்தனர். இது 19.14 சதவீதமாக அமைகிறது. 6 ஆசிரியர்கள் ஒருவரையொருவர் பரிகாசம் செய்வதையும், வாக்குவாதம் செய்து கொள்வதையும், திட்டிக்கொள்வதையும் அவதானிப்பதாக பதிலளித்தனர். இது 14.89 சதவீதமாக அமைகிறது. மேலும் ஆசிரியர்களில் ஒருவர் வகுப்பறையில் உள்ள பொருட்களை வீசி எறிவதாகவும், உடைப்பதையும் அவதானிக்க முடிவதாக பதிலளித்தனர். இது 02.12 சதவீதமாக அமைகிறது.

## தீர்வுகளும் ஆலோசனைகளும்

**பிள்ளைகளுடன் பெற்றோர்கள் போதியளவு நேரத்தை செலவளிப்பதில்லை**

**இதற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும்.**

பெற்றோர்கள் எத் தொழிலில் ஈடுபட்டாலும் பிள்ளைகளுக்கென குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி அவர்களுடைய பிரச்சினைகள், தேவைகள் குறித்து கலந்துரையாடுதல் வேண்டும். அதிபர் பெற்றார் கூட்டங்களில் மாணவர்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு போதிய நேரத்தை ஒதுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும். பெற்றோர் பிள்ளைகளின் தேவைகள் குறித்தும், பிரச்சினைகளின் குறித்தும் பிள்ளைகளிடம் அன்புடன் கேட்டுத் தீர்ப்பதற்கு அறிவுறுத்தல் வேண்டும். குடும்பமாக ஒன்றிணைந்து வேலைகளில் ஈடுபடல், குடும்பத்துடன் சேர்ந்து உணவு உண்ணல் போன்றவற்றின் மூலம் பிள்ளைகளுடன் கழிக்கும் நேரத்தை அதிகப்படுத்திக் கொள்ள பெற்றோர்களுக்கு ஆலோசனைகளை வழங்க வேண்டும். பிள்ளைகள் பெற்றோரிடம் அனைத்து விடயங்களையும் கூறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கட்டிளமைப்பருவ மாணவர்களுக்கு தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளவும், தம்மை பாதுகாக்கவும் பெற்றோரே சிறந்தவர்கள் என்ற மனப்பாங்கை வளர்த்தல் வேண்டும்.

மாணவர்கள் ஆர்வத்துடன் பாடசாலைக்குச் செல்வதற்கான விருப்பமின்மை

**இதற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும்.**

பாடசாலைக்கு நேர்த்தியாக வரும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு பரிசளிப்பு விழாக்களை பாடசாலை மட்டத்தில் முன்னெடுப்பது அவசியம். பாடசாலைக்கு நேர்த்தியாக சமூகமளிக்காத மாணவர்களின் பெற்றோரை அணுகி அது தொடர்பில் கலந்துரையாடுதல் வேண்டும். பெற்றோருக்கு மாணவர்களின் தேவைகள் குறித்தும் அவர்களுடைய நேர்த்தி, ஒழுக்கம் போன்றவற்றில் கவனம் செலுத்துவதன் அவசியத்தை வலியுறுத்துதல் வேண்டும். குழு உணர்வையும், கற்றல் ஊக்கத்தையும் மாணவர்களிடையே மேலும் அதிகரிப்பதற்கான செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்ளல் வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் இணைந்து கற்பதற்கான புதிய நுட்பங்களைக் கையாளுதல் வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களிடையே புத்தாக்க சிந்தனையை ஏற்படுத்தும் வகையிலான வேலைத்திட்டங்களை வழங்குதல் மாணவர்களிடையே புத்தாக்க சிந்தனையை விருத்தி செய்வதாக அமையும். பாடசாலைகள் தான் எதிர்காலத்தில் சமூகத்திற்குத் தேவையான தலைவர்களை உருவாக்குகின்றன என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் அனைத்து மாணவர்களுக்கும் தலைமைத்துவப் பொறுப்புக்களை வழங்குதல் வேண்டும்.

**மாணவர்கள் போட்டி நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்குபற்றாமை**

**இதற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும்.**

திறமையான மாணவர்களை போதிய நியாயமான போட்டிகளை நடாத்தி அதனடிப்படையில் தெரிவு செய்வதற்கு ஆசிரியர்கள் முன்வர வேண்டும். தோல்விகளை ஏற்றுக் கொள்வதற்கும் வெற்றியை ஏற்றுக் கொள்வதற்குமான மனப்பாங்கை மாணவர்களிடத்து வளர்க்க வேண்டும். மாணவர்கள் அனைவரும் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஆசிரியர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வகுப்பறையில் போதிய வழிகாட்டல் ஆலோசனைகளை முன்னெடுத்தல் வேண்டும். ஆசிரியர் மாணவர்களுக்கு முரண்பட்டுக் கொள்வதால் உண்டாகும் தீய விளைவுகள் குறித்து தெளிவுபடுத்துதல் அவசியம். மாணவர்களின் விருப்பைக் கண்டறிந்து அத்துறையில் மாணவர்கள் முன்னேறிச் செல்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் மூலம் திசைத் திருப்புதல் வேண்டும். பாடசாலையினால் மாணவர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் அதிகரிக்கடல் வேண்டும். போட்டி நிகழ்வுகளில் மாத்திரம் மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தாது ஏனைய செயற்பாடுகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டுவதற்கு ஆசிரியர்கள் நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும்.

**பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு வராமல் தண்டனைக்கு உள்ளாகுதல்.**

**இதற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும்.**

மாணவர்களுக்கு நேரத்தின் முக்கியத்துவம் பற்றி தெளிவுபடுத்துதல் வேண்டும். தண்டனை மூலம் கற்றலை ஊக்குவிக்க முடியாது என்பதை ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும். வீட்டுப் பொறுப்புக்களைப் பிள்ளைகளின் மேல் சுமத்திவிட்டு தொழில் செய்யும் பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் கல்வியில் பின்னேற்ற நிலையை தனிப்பட்ட ரதீயில் தொடர்பு கொண்டு புரிய வைத்தல் வேண்டும். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சமூக நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் அவசியம். மாணவர்களை வெறுமனே நண்பர்களோடு சிரித்துப் பேசுவதற்கு அல்லாமல் புதிய விடயங்களைக் கண்டறிவதற்கு ஆசிரியர் தூண்டுதல் வேண்டும். மாணவர்கள் யாவரும் ஒன்றிணைந்து புதிய விடயங்களை பற்றி கலந்துரையாடுவதற்கு வழிகாட்டுதல் வேண்டும். மாணவர்கள் பாடசாலை விட்டுச் சென்றாலும் வீடுகளில் குழுவாக இணைந்து கற்பதற்கான குழுச் செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் அவசியமாகும். மாலை நேர வகுப்புக்களை விட பெற்றோரின் ஈடுபாடே மாணவர்களின் கற்றலை முனனேற்றும் என்பதை பெற்றோர்களுக்குப் புரிய வைத்தல் வேண்டும்.

**மாணவர்கள் வகுப்பில் ஏனைய மாணவர்களுடன் முரண்பட்டுக் கொள்கின்றமை.**

**இதற்கான தீர்வுகளும் ஆலோசனைகளும்.**

மாணவர்களுக்கு பொறுப்புக்களை வழங்கும் போதும் சில வேளைகளில் முரண்பாடுகள் தோன்றுவதால் உரிய முறையில் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும். மாணவரகளது ஓய்வு நேரங்களை பயனுள்ள வழிகளில் கழிப்பதற்கு ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை விருத்தி செய்தல் வேண்டும். வகுப்பறையில் மாணவர்களிடையே முரண்பாடு ஏற்படும் போது அது குறித்து ஆசிரியரே நடவடிக்கை எடுப்பது அதிபரின் நேரத்தை வீணடிக்காதிருக்கும். அதிபர் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுடன் கடுமையாக நடந்து கொள்ளாது நண்பர்களாக அவர்களுடன் அணுகி அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்க்க வேண்டும். பெற்றோர் பிள்ளைகளின் தேவைகள் குறித்தும், பிரச்சினைகளின் குறித்தும் பிள்ளைகளிடம் அன்புடன் கேட்டுத் தீர்ப்பதற்கு அறிவுறுத்தல் வேண்டும். பிளளைகள் பெற்றோரிடம் அனைத்து விடயங்களையும் கூறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பாடசாலைகளில் உள ஆற்றுகைப் டுத்தலுக்கான செயற்பாடுகள் மேலும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்படுவது அவசியமாகும். பொருத்தமான உள ஆலோசகரை நியமித்து அல்லது

பொருத்தமான வளவாளரைக் கொண்டே உள ஆலோசனை வழிகாட்டல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் பாடசாலை நாட்கள் தவிர்ந்த வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களில் இச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்படுவது மாணவர்களின் கற்றலை பாதிக்காது இருக்கும்.

## உசாத்துணைகள்


1. அருள்மொழி, செ. 2008. கல்வி ஆய்வு முறைகள், எவகிறீன் அச்சகம், மட்டக்களப்பு.
2. அந்தோணி ஜோசப், 2003. கல்வி சார் வளப்பகிர்வுகளின் பகுப்பாய்வு, கல்வி முதுமாணி யாழ்ப்பாணம்.
3. ரோலன்ட் அபேபால, 2016. புதிய கற்றல் செயல்நெறிகள், சாரா வெளியீடு, கொழும்பு.
4. ஜெயராஜா, சபா. 2011. கல்வியில் எழுவினாக்கள், சேமமடு பொத்தகசாலை, பீபல்ஸ் பார்க், கொழும்பு.
5. Anne Stonehouse , 2006, **Guiding children's behavior in positive ways,** NCAC.
6. Arlene Skolnick and Stacey Rosencranz, 2017, **What are the Effect on Children of Single Parent,**USA.
7. **Basic tips child care provides can used to guide children's behavior** , 2015,United States Department of agriculture.
8. **Basic tips child care provides can used to guide childrens behavior** ,2015,United States Department of agriculture
9. CDC National Health Institution Survey ,1985 – 2004.
10. David, .J, Dwyer and Jeffrey, .B, Hecht ,1992, **Minimal Parental Involvement**, Academic Department.
11. David pelcovitz,ph.D,2013, **The impact of working mothers on child development**, US.
12. Diana,.E,Nevarez Ramirez,2015, **Parent Child Relationships and its Effects on Adolescence,**US.
13. Dr Rohaiza and Rokis, 2012, An Exploratory Research On **The Attitudes Of ParentsWorkers in Sending Their Children to Chilcore/Pre Educational Centres**, IIUM Research Invention and Innovation Exhibition.
14. Dr. Hakan Usakli,2013, **Comparison of Single and Two Parents Children in terms of Behavioral Tendencies**, Education Faculty Sinop, Turkey.
15. Dr.Abdhul Saththar, Allahdino Abro.Ph.D and Roshan Ali Mugheri ,2012, **Mothers on the development of children**, Pakistan
16. Dr.Pete Johnson,1998, **Effect of media exposure on child health**,USE School of medicine.
17. Gail,. L,Zellman. and Jillm Waterman,1998, **Understanding the Impact of Parent School Involvement on Children's Educational Outcomes**, The Journal of Educational Research, volume 91.
18. German Technical Co-Operation , 2007.
19. **Guiding your young child with positive discipline**,2016, Canadian pediatric society

20. **How to encourage good behavior from your child** ,2003, Murdoch children's research institute and center for community child health.
21. Jared, W., 2014, **Mothers Education Significiant to Childrens' Academic Success,** University of Michigan.
22. Jeoffry L.Brown et al.,2015, **Parental involvement child temperament parent work over differential relations for mothers and fathers**, USA.
23. John, Ermish and Marco,1970, **British house hold penal study**., Joseph Rowntree Foundation,UK.
24. Katherine, .G,Henson , 2017,**The influence of early media exposure on children development and learning,**US.
25. Lance, K.C. Marcia, J 2000. **How to School Librarians Help Kids Achieve Standards**. – The Second Colorado Study – Http://www/LRS.Org